(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CRMP.No.219/2025**

**CW1– சேகர் த/பெ. ஆறுமுகம்**

புகார்தாரர் ஆஜர், சத்திய பிரமாணத்தின் பேரில் புகார்தாரரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

நான் திருச்செங்கோடு KSR கல்லூரியில் சேர்மேன் டாக்டர்.K.S.ரங்கசாமி என்பவரிடம் 35 வருடங்களாக கார் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கோவையை சேர்ந்த மதுசங்கர் மற்றும் பிராங்ளின் ஆகியோர்கள் எங்கள் முதலாளியிடம் கல்லூரி நிர்வாகத்திற்காக ரூபாய் 300 கோடி கடன் பெற்று தருவதாக கூறி அதற்கு கமிஷன் தொகையாக சுமார் 9 கோடி ரூபாயை பெற்றுக்கொண்டுள்ளார்கள். நான் எனது முதலாளியிடம் மேற்படி நபர்கள் மோசடி நபர்கள் போல் உள்ளார்கள் என்றும் அவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்று கூறினேன் எனது முதலாளியும் மேற்படி நபர்களுக்கு பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார். மேலும், எங்கள் முதலாளிக்கு கடன் பெற்றுதருவதாக கூறிவந்தவர்கள் கடன் பெற்று தராமல் காலம் தாழ்த்தி வந்தார்கள். கடந்த 6 மாதத்திற்கு முன்பு மேற்படி நபர்களான மதுசங்கர் மற்றும் பிராங்ளின் மற்றும் பாலவிக்னேஷ் ஆகியோர்கள் மீது எங்கள் முதலாளியின் மகன் சீனிவாசன் என்பவர் கோவை மாநகர குற்றப்பிரிவில் புகார் அளித்து அதன் பேரில் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். அவர்கள் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு 21.12.2024ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் வழக்கம் போல் வேலையை முடித்துவிட்டு KSR கல்லூரிக்கு பின்புறம் உள்ள கேட்டின் வழியே வெளியே செல்லும்போது மதுசங்கர் மற்றும் பிராங்ளின் ஆகியோர்கள் என்னிடம் வந்து நீ இல்லாமல் இருந்ததிருந்தால் உனது முதலாளியிடம் மேலும் 10 கோடி ரூபாய் வாங்கியிருப்போம் என்று கூறி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் பிறகு கார் எடுத்து கொண்டு சென்றுவிட்டார்கள். அப்போது இருட்டாக இருந்ததால் சிறிது நேரம் கழித்து

நான் கீழே விழுந்ததில் எனக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. என்னை அவர்கள் தாக்கும்போது மதுசங்கரும், பிராங்ளின் ஆகியோர்கள் என்னை கெட்ட வார்த்தைகளால் திட்டி காரை ஏற்றி கொள்ளுவதாக கூறினார்கள். பச்சைத்தாள்களில் கையெழுத்து போடுமாறு என்னிடம் கேட்டார்கள் நான் கையெழுத்து போடவில்லை, தூரத்திலிருந்து ஏதோ வண்டி வருவதை பார்த்துவிட்டு அவசரம் அவசரமாக கிளம்பிவிட்டார்கள். பிராங்ளின் மற்றும் மதுசங்கர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2025.11.18 18:27:08 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CRMP.No.219/2025**

**CW2– ஜெயபிரகாஷ், த/பெ. தருமன்**

சத்திய பிரமாணத்தின் பேரில் புகார்தாரர் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

நான் அச்சங்காடு, மூலக்காடு அஞ்சல், மேட்டூர் தாலுக்கா, சேலம் மாவட்த்தில் வசித்து வருகிறேன். நான் திருச்செங்கோடு KSR கல்லூரியில் Transport Incharge– ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2024ம் தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் கொக்கராயின் பேட்டையில் எங்களது கல்லூரி வாகனம் பழுதடைந்திருந்ததால் அதை பார்த்துவிட்டு நான் கல்லூரிக்கு திரும்பி வந்துகொண்டிருந்தேன், அப்போது கல்லூரியின் பின்பக்க கேட்டில் புகார்தாரர் சேகர் சோகமாக உட்கார்ந்திருந்தார், நான் அவரிடம் என்ன ஆனது என்று கேட்டேன், அதற்கு அவர் என்னிடம் நமது கல்லூரி நிர்வாகத்திற்கு பணம் கொடுக்கவேண்டிய நபர்கள் சேகரிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து போடுமாறு கேட்டதாகவும், கையெழுத்து போடததால் அதற்கு அவரை அடித்துவிட்டதாக கூறினார். நான் உடனடியாக கல்லூரி வளாக மேலாளரிடம் தகவல் சொன்னேன், அவர் கல்லூரி சேர்மேனுக்கு தகவல் கொடுத்தார். கல்லூரி நிர்வாகத்தின் மூலமாக புகார்தாரர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் எந்த நடவடிக்கையும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கறிஞரிடம் கேட்டபோது வழக்கை முடித்துவைத்ததாக சொன்னார்.

**நீதிமன்ற கேள்விகள்;**

1. கேள்வி: நீர் சம்பவத்தை நேரில் பார்த்தீரா ?

பதில் : நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

2. கேள்வி : யார் யார் சம்பவத்தில் ஈடுப்பட்டார்கள் என்று அவர்களின் பெயர் விவரம் தெரியுமா ?

பதில் : தெரியாது

3. கேள்வி புகார்தாரர் காவல் நிலையத்தில் யார் மீது புகார் அளித்தார் என்று தெரியுமா ?

பதில் : தெரியாது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2025.11.18 18:27:21 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CRMP.No.219/2025**

**CW3– மாதேஷ், த/பெ. மாதன்**

சத்திய பிரமாணத்தின் பேரில் புகார்தாரர் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

நான் நேரு நகர், காவேரிபுரம், கொளத்தூர், மேட்டூர் தாலுக்கா, சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் திருச்செங்கோடு KSR கல்லூரியில் கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். 21.12.2024ம் தேதி மாலை சுமார் 6.40 லிருந்து 6.45 மணிக்குள் புகார்தாரர் சேகர் எங்கள் கல்லூரியின் பின்புற கேட் அருகில் அமர்ந்திருந்தார், நானும், மேனேஜரும் வந்துகொண்டிருந்தோம். அப்போது சேகரிடம் என்ன நடந்தது என்று கேட்ட போது மூன்று பேர் அங்கு வந்ததாகவும் வெள்ளைத்தாளில் கையெழுத்து போடுமாறு சொன்னதாகவும், கையெழுத்து போடாததால் தன்னை அடித்துவிட்டதாகவும் கூறினார். அப்போது சேர்மேனின் பி.ஏ.வுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். அவர் சேர்மேனிடம் பேசிவிட்டு எங்களிடம் புகார் அளிக்குமாறு கூறினார். நாங்கள் காவல் நிலையம் சென்றோம். புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

**நீதிமன்ற கேள்விகள்:**

1. கேள்வி: நீர் சம்பவத்தை நேரில் பார்த்தீரா ?
   பதில் : நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.
2. கேள்வி : யார் யார் சம்பவத்தில் ஈடுப்பட்டார்கள் என்று அவர்களின் பெயர் விவரம் தெரியுமா
   பதில் : தெரியாது
3. கேள்வி: புகார்தாரர் காவல் நிலையத்தில் யார் மீது புகார் அளித்தார் என்று தெரியுமா ?
   பதில் : தெரியாது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2025.11.18 18:27:26 +0530